# சிறுவர்களுக்கான வேத உபதேசம்

(வினா-விடை போதனைகள்)

REFORMED PUBLICATIONS

சீர்திருத்த வெளியீடுகள்
சென்னை, இந்தியா

**சிறுவர்களுக்கான வேத உபதேசம்**

மொழிபெயர்ப்பு:

**ஆர். பாலா**

*முதல் பதிப்பு 2006*
*இரண்டாம் பதிப்பு: 2014*

*கிடைக்குமிடம்:*

**சீர்திருத்த வெளியீடுகள்**
*6/87 காமராஜர் தெரு,*
*திருவள்ளுவர் நகர்,*
*அயனாவரம்,*
*சென்னை 600023.*
*தமிழ்நாடு, இந்தியா.*
*தொலைப்பேசி: 9445671113*
*ஈமெயில்:* rpchennai23@gmail.com

*கிறிஸ்தவ தமிழ் இலக்கியங்கள் குறித்த மேலதிக தகவல்களுக்கு* www.biblelamp.org *வலைப்பூவைப் பார்க்கவும்.*

# முன்னுரை

சிறுவர்களுக்கான இந்த வேத உபதேச நூல் கிறேன்ட் ரெபிட்ஸ் சீர்திருத்த பாப்திஸ்து சபை வெளியிட்ட நூலின் தமிழாக்கமாகும். அதோடு புதிதாக ஒரு சில கேள்விகளை மட்டும் இணைத்துள்ளோம். சீர்திருத்தவாதிகளும், பியூரிட்டன் பெரியாரும் திருச்சபை மக்கள் அனைவரும் வேதத்தில் நல்லறிவு கொண்டிருக்க வேண்டும் என்று பாடுபட்டனர். சிறுவர்களுக்கு வேதத்தைப் போதிப்பதில் அவர்கள் எப்போதும் அதிக சிரத்தை காட்டியுள்ளார்கள். மார்டின் லூத்தர் தன்னுடைய நூல்கள் அனைத்தும் அழிந்து போனாலும் தான் சிறுவர்களுக்காக எழுதிய வேத உபதேச நூல் மட்டும் அழியாமல் எக்காலத்திற்கும் பயன்பட வேண்டும் என்று விரும்பினார். மார்டின் லூத்தர் வினாவிடைப் பயிற்சி நூலுக்கு அளித்த முக்கியத்துவத்தை இது உணர்த்துகிறது. குடும்பங்கள் தோறும் சிறுவர்களுக்கு பழைய ஏற்பாட்டுக் காலத்திலிருந்தே சிறப்பான வேத போதனை அளிக்கப்பட்டு வந்தது. இன்றைய சிறுவர்களே நாளைய சபையை அலங்கரிக்கப்போகும் தலைவர்களும், ஆத்துமாக்களுமாவர். அவர்கள் இன்று வேத அறிவில் வளருவது மிக அவசியம். எனவேதான் உலகெங்குமுள்ள சீர்திருத்த சபைகள் இத்தகைய வேத அறிவை சிறுவர்களுக்கு அளித்து வருகின்றன, இந்நூலை திருச்சபைகள் ஞாயிறு பாடசாலைகளிலும், குடும்பத்தலைவர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு வீட்டில் போதிக்கவும் பயன்படுத்திக்கொள்ளலாம். சிறுவர்கள் மனதில் நிற்கும்படியாக ஒவ்வொரு கேள்வி பதிலுக்கும் ஒரு வேத வசனம் இதில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இன்றைய சிறுவர்களும், திருச்சபைகளும் வேத அறிவில் வளர இந்நூல் பயன்பட கர்த்தரின் ஆசீர்வாதத்தை நாடி இதை வெளியிட்டுள்ளோம். இதை வெளியிட அனுமதி தந்த கிறேன்ட் ரெபிட்ஸ் சீர்திருத்த பாப்திஸ்து சபைக்கு எமது நன்றி.

**போதகர் பாலா**

# சிறுவர்களுக்கான வேத உபதேகம்

**கேள்வி** *1:* *உன்னைப் படைத்தது யார்?*

**பதில்:** *கடவுள் என்னைப் படைத்தார்.*
*(ஆதியாகமம் 1:27)*

**கேள்வி** *2:* *வேறு எவற்றையெல்லாம் கடவுள் படைத்தார்?*

**பதில்:** *கடவுள் எல்லாவற்றையும் படைத்தார்.*
*(ஆதியாகமம் 1:1)*

**கேள்வி** *3:* *கடவுள் ஏன் உங்களையும், எல்லாவற்றையும் படைத்தார்?*

**பதில்:** *அவருடைய மகிமைக்காக.*
*(ரோமர் 11:36)*

**கேள்வி** *4:* *கடவுளை நீங்கள் எப்படி மகிமைப்படுத்த முடியும்?*

**பதில்:** *அவரில் அன்புகூர்ந்து அவருடைய கட்டளைகளின்படி நடப்பதன் மூலம்.*
*(உபாகமம் 6:5, 6)*

**கேள்வி** *5:* *கடவுளை நீங்கள் ஏன் மகிமைப்படுத்த வேண்டும்.*

**பதில்:** *அவர் என்னைப் படைத்துப் பராமரிப்பதால்.*
*(வெளிப்படுத்தல் 4:11)*

**கேள்வி** *6:* *கடவுளை மகிமைப்படுத்த வேண்டும் என்று எங்கே படித்தீர்கள்?*

**பதில்:** *வேதத்தில் மட்டும். (சங்கீதம் 119:9)*

**கேள்வி** *7:* வேதம் எதைப் போதிக்கின்றது?

**பதில்:** கடவுள் யார் என்றும் அவர் நம்மிடம் எதை எதிர்பார்க்கிறார் என்றும் வேதம் போதிக்கின்றது. *(2 தீமோத்தேயு 3:16, 17)*

**கேள்வி** *8:* வேதத்தை எழுதியது யார்?

**பதில்:** பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்பட்ட பரிசுத்தமான மனிதர்கள். *(2 பேதுரு 1:21)*

**கேள்வி** *9:* கடவுள் யார்?

**பதில்:** கடவுள் ஆவியானவர். அவருக்கு மனிதர்களைப் போல் சரீரம் இல்லை. *(யோவான் 4:24)*

**கேள்வி** *10:* ஒன்றுக்கு மேல் கடவுள்கள் உண்டா?

**பதில்:** இல்லை, ஒரே கடவுள் மட்டுமே இருக்கிறார். *(ஏசாயா 44:6)*

**கேள்வி** *11:* இந்த ஒரே கடவுள் எத்தனை ஆட்களில் இருக்கிறார்?

**பதில்:** மூன்று ஆட்களில். *(2 கொரிந்தியர் 13:14)*

**கேள்வி** *12:* அவர்கள் யார்?

**பதில்:** பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர். *(மத்தேயு 28:19)*

**கேள்வி** *13:* கடவுள் எங்கே இருக்கிறார்?

**பதில்:** கடவுள் எங்குமிருக்கிறார். *(சங்கீதம் 139:7, 8)*

**கேள்வி** *14:* நீங்கள் கடவுளைக் காண முடியுமா?

**பதில்:** இல்லை, என்னால் கடவுளைக் காண முடியாது. ஆனால், அவர் எப்போதும் என்னைக் காண்கிறார். *(யோவான் 1:18; எரேமியா 23:24)*

**கேள்வி** *15:* *கடவுள் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறாரா?*

**பதில்:** *ஆம். கடவுளிடம் இருந்து எதையும் மறைக்க முடியாது. (எபிரெயர் 4:13)*

**கேள்வி** *16:* *கடவுளால் எல்லாவற்றையும் செய்ய முடியுமா?*

**பதில்:** *ஆம். கடவுள் தனது பரிசுத்தமான சித்தம் அனைத்தையும் செய்கிறார். (மாற்கு 10:27)*

**கேள்வி** *17:* *நமது ஆதிப் பெற்றோர் யார்?*

**பதில்:** *ஆதாமும், ஏவாளும். (ஆதியாகமம் 2:7, 22)*

**கேள்வி** *18:* *எவற்றால் நமது ஆதிப் பெற்றோர் படைக்கப்பட்டார்கள்?*

**பதில்:** *கடவுள் மண்ணிலிருந்து ஆதாமையும், ஆதாமின் சரீரத்திலிருந்து ஏவாளையும் படைத்தார். (ஆதியாகமம் 2:7, 22)*

**கேள்வி** *19:* *ஆதாமுக்கும், ஏவாளுக்கும் உடலைத்தவிர கடவுள் வேறு எதைக் கொடுத்தார்?*

**பதில்:** *என்றுமே அழியாத ஆத்துமாக்களை அவர்களுக்குக் கொடுத்தார். (1 கொரிந்தியர் 15:45; பிரசங்கி 12:7)*

**கேள்வி** *20:* *தேவன் ஆதாமையும், ஏவாளையும் எந்த நிலையில் படைத்தார்?*

**பதில்:** *அவர் அவர்களை பரிசுத்தமாகவும் சந்தோஷமாகவும் உள்ள நிலையில் படைத்தார். (பிரசங்கி 7:29; ஆதியாகமம் 1:31)*

**கேள்வி** *21:* *கடவுளோடு ஆதாமுக்கு எத்தகைய உறவு இருந்தது?*

**பதில்:** *மகனைப் போன்ற உறவு இருந்தது. (லூக்கா 3:38)*

**கேள்வி 22:** *ஆதாம் எதைச் செய்யும்படியாக கடவுள் கட்டளையிட்டார்?*

**பதில்:** *பூரணமாகத் தனக்குக் கீழ்ப்படியும்படிக் கட்டளையிட்டார். (ஆதியாகமம் 2:16, 17)*

**கேள்வி 23:** *ஆதாமுக்கு கடவுள் என்ன வாக்குறுதி கொடுத்தார்?*

**பதில்:** *தனக்குக் கீழ்ப்படிந்து நடந்தால் ஜீவனைத் தருவேன் என்று வாக்குறுதி கொடுத்தார். (ஆதியாகமம் 2:16, 17)*

**கேள்வி 24:** *ஆதாமைக் கடவுள் எவ்வாறு பயமுறுத்தினார்?*

**பதில்:** *தன்னை மீறி நடந்தால் மரணத்தை சந்திக்க நேரிடும் என்று பயமுறுத்தினார். (ஆதியாகமம் 2:16, 17)*

**கேள்வி 25:** *ஆதாம் கடவுளுக்கு கீழ்ப்படிந்தானா?*

**பதில்:** *இல்லை, கடவுளுக்கு எதிராகப் பாவம் செய்தான். (ஆதியாகமம் 3:6)*

**கேள்வி 26:** *பாவம் என்றால் என்ன?*

**பதில்:** *கடவுளுடைய நியாயப்பிரமாணத்திற்குக் கட்டுப்படாமல் இருப்பதும் அதை மீறுவதுமாகும். (1 யோவான் 3:4)*

**கேள்வி 27:** *நியாயப்பிரமாணத்திற்குக் கட்டுப்படாமல் இருப்பது என்றால் என்ன?*

**பதில்:** *கடவுள் கட்டளையிட்டபடி நடவாமலும் அதைச் செய்யாமலும் இருப்பது. (யாக்கோபு 4:17)*

**கேள்வி 28:** *மீறுதல் என்றால் என்ன?*

**பதில்:** *கடவுள் தடை செய்வதை செய்தல். (யாக்கோபு 2:10)*

**கேள்வி 29:** *நமது ஆதிப் பெற்றோர் செய்த பாவம் என்ன?*

**பதில்:** *தடை செய்யப்பட்ட கனியை உண்டது. (ஆதியாகமம் 3:6)*

**கேள்வி 30:** *அவர்கள் ஏன் விலக்கப்பட்ட கனியை சாப்பிட்டார்கள்?*

**பதில்:** *கடவுளின் வார்த்தையை அவர்கள் நம்பாததால். (ஆதியாகமம் 3:1-6)*

**கேள்வி 31:** *யார் அவர்களைப் பாவம் செய்யத் தூண்டியது?*

**பதில்:** *பிசாசு ஏவாளை சோதித்தது; அவள் கனியை ஆதாமிடம் கொடுத்தாள். (ஆதியாகமம் 3:4, 5)*

**கேள்வி 32:** *நமது ஆதிப் பெற்றோர் பாவம் செய்தபோது அவர்களுக்கு என்ன நடந்தது?*

**பதில்:** *பரிசுத்தமாகவும், சந்தோஷமாகவும் இருப்பதற்குப் பதிலாக பாவமுள்ளவர்களாகவும், பரிதாபமானவர்களாகவும் மாறினார்கள். (ரோமர் 5:12)*

**கேள்வி 33:** *ஆதாம் பாவம் செய்தபோது தனக்காக மட்டுமே அதைச் செய்தானா?*

**பதில்:** *இல்லை, தன்னுடைய எல்லாச் சந்ததிகளுக்கும் அவன் பிரதிநிதியாக இருந்தான். (ரோமர் 5:19)*

**கேள்வி 34:** *ஆதாமுடைய பாவம் மனுக்குலத்தின்மீது என்ன தாக்கத்தை ஏற்படுத்தியது?*

**பதில்:** *மனுக்குலமனைத்தும் பாவமும், துன்பமும் உள்ள நிலையில் பிறக்கிறது. (எபேசியர் 2:3)*

**கேள்வி 35:** *ஆதாமிடமிருந்து நாம் பெற்றுக் கொள்கிற பாவத்தன்மையின் பெயர் என்ன?*

**பதில்:** *மூல பாவம். (சங்கீதம் 51:5)*

**கேள்வி 36:** *மனிதவர்க்கம் முழுவதும் பாவத்திலும், துன்பத்திலும் அழிந்துவிடும்படி கடவுள் விட்டுவிட்டாரா?*

**பதில்:** *இல்லை, ஒரு மீட்பரை அனுப்பி தன்னுடைய மக்களை இரட்சிக்க கடவுள் நோக்கம் கொண்டார். (எபேசியர் 1:4, 5)*

**கேள்வி 37:** *கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் மீட்பர் யார்?*

**பதில்:** *கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் மீட்பர் இயேசு கிறிஸ்து மட்டுமே. (1 தீமோத்தேயு 2:5)*

**கேள்வி 38:** *இயேசு கிறிஸ்து யார்?*

**பதில்:** *இயேசு கிறிஸ்து கடவுளின் நித்திய தேவ குமாரன். (யோவான் 20:31)*

**கேள்வி 39:** *இயேசு கிறிஸ்து தனது மக்களை எவ்வாறு மீட்டார்?*

**பதில்:** *தனது மக்களுக்காக நியாயப்பிரமாணத்தைப் பூரணமாகக் கடைப்பிடித்து அவர்கள் தங்களுடைய பாவத்திற்காக அனுபவித்திருக்க வேண்டிய தண்டனையும் அனுபவித்தார். (ரோமர் 5:18)*

**கேள்வி** *40:* *தனது மக்களுக்காக நித்திய தேவ குமாரன் எவ்வாறு கீழ்ப்படிந்து துன்பமனுபவிக்க முடியும்?*

**பதில்:** *கீழ்ப்படிந்து துன்பத்தை அனுபவிப்பதற்காக தேவ குமாரனாகிய கிறிஸ்து மனித உருவமெடுத்தார். (எபிரெயர் 2:14)*

**கேள்வி 41:** *தேவ குமாரன் எவ்வாறு மனிதனானார்?*

**பதில்:** *கன்னி மரியாளுக்குப் பிறந்ததன் மூலம். (மத்தேயு 1:18)*

**கேள்வி** *42:* *எல்லா மனிதர்களும் பாவம் செய்வதுபோல் இயேசு கிறிஸ்து எப்போதாவது பாவம் செய்தாரா?*

**பதில்:** *இல்லை, அவர் பரிசுத்தமானவரும், குற்றமற்றவரும், தூய்மையுடையவருமானவர். (எபிரெயர் 7:26)*

**கேள்வி** *43:* *கிறிஸ்து ஆற்றும் பணிகள் யாவை?*

**பதில்:** *தீர்க்கதரிசி, ஆசாரியர், அரசர் ஆகிய பணிகளை கிறிஸ்து செய்கிறார். (வெளிப்படுத்தல் 1:5)*

**கேள்வி** *44:* *கிறிஸ்து எவ்வாறு தீர்க்கதிரிசியாக இருக்கிறார்?*

**பதில்:** *அவர் நமக்கு கடவுளின் சித்தத்தைப் போதிக்கிறார். (அப்போஸ்தலர் 3:22)*

**கேள்வி** *45:* *கிறிஸ்து எவ்வாறு ஆசாரியராக இருக்கிறார்?*

**பதில்:** *அவர் நமது பாவங்களுக்காக மரித்தபின் நமக்காக கடவுளிடம் பரிந்து பேசுகிறார். (ரோமர் 8:34)*

**கேள்வி** *46:* *கிறிஸ்து எவ்வாறு அரசராக இருக்கிறார்?*

**பதில்:** *அவர் நம்மை ஆளுவதோடு, பாதுகாக்கவும் செய்கிறார். (1 கொரிந்தியர் 15:25)*

**கேள்வி** *47:* *தீர்க்கதரிசியாக கிறிஸ்து உங்களுக்கு ஏன் தேவை?*

**பதில்:** *ஏனெனில், நான் அறியாமையில் இருக்கிறேன். (ரோமர் 3:11)*

**கேள்வி** *48:* *ஆசாரியராக கிறிஸ்து உங்களுக்கு ஏன் தேவை?*

**பதில்:** *ஏனெனில், நான் குற்றவாளியாக இருக்கிறேன். (ரோமர் 3:23)*

**கேள்வி** *49:* *அரசராக கிறிஸ்து உங்களுக்கு ஏன் தேவை?*

**பதில்:** *ஏனெனில், நான் பெலனற்றவனாகவும், உதவியற்றவனாகவும் இருக்கிறேன். (சங்கீதம் 56:3)*

**கேள்வி** *50:* *கிறிஸ்து இவ்வுலகில் எவ்விதமான வாழ்க்கையை வாழ்ந்தார்?*

**பதில்:** *வறுமையும், துன்பமும் உள்ள வாழ்க்கையை வாழ்ந்தார். (ஏசாயா 53:3)*

**கேள்வி** *51:* *கிறிஸ்து எத்தகைய மரணத்தை சந்தித்தார்?*

**பதில்:** *வேதனையும் அவமானமும் நிறைந்தவராக சிலுவையில் மரித்தார். (பிலிப்பியர் 2:8)*

**கேள்வி** *52:* *சிலுவை மரணத்தின் பின் கிறிஸ்து கல்லறையில் தொடர்ந்திருந்தாரா?*

**பதில்:** *இல்லை, மூன்றாம் நாளில் அவர் உயிர்த்தெழுந்தார். (1 கொரிந்தியர் 15:4)*

**கேள்வி** *53:* *கிறிஸ்து இப்போது எங்கே இருக்கிறார்?*

**பதில்:** *பரலோகத்தில், பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். (எபிரெயர் 1:3)*

**கேள்வி** *54:* *கிறிஸ்து மீண்டும் இவ்வுலகிற்கு வருவாரா?*

**பதில்:** *ஆம், இறுதி நாளில் இவ்வுலகை நியாயம் தீர்க்க வருவார். (வெளிப்படுத்தல் 22:12)*

**கேள்வி** *55:* *கிறிஸ்துவின் மீட்பு எவ்வாறு என்னுடையதாகின்றது?*

**பதில்:** *கடவுளின் திட்ப உறுதியான அழைப்பால். (2 தீமோத்தேயு 1:9)*

**கேள்வி** *56:* *திட்ப உறுதியான அழைப்பு என்றால் என்ன?*

**பதில்:** *பாவிகளை கிறிஸ்துவிடம் கொண்டுவரும் கடவுளின் செயல். (யோவான் 6:44)*

**கேள்வி** *57:* *பாவிகள் கிறிஸ்துவை எங்கே கேள்விப்படுகிறார்கள்?*

**பதில்:** *இலவசமாக கிறிஸ்துவை அனைவருக்கும் வழங்கும் நற்செய்தியின் மூலம் கேள்விப்படுகிறார்கள். (யோவான் 3:16)*

**கேள்வி** *58:* *திட்ப உறுதியான அழைப்பின் மூலம் அழைக்கப்பட்ட பாவிகள் இவ்வுலகில் எத்தகைய ஆசீர்வாதங்களை அடைகிறார்கள்?*

**பதில்:** *நீதிமானாக்குதல், மகவேற்பு, பரிசுத்தமாக்குதல் ஆகிய ஆசீர்வாதங்களை அடைகிறார்கள். (1 கொரிந்தியர் 1:30)*

**கேள்வி** *59:* *நீதிமானாக்குதல் என்றால் என்ன?*

**பதில்:** *கடவுள், பாவிகளுக்கு மன்னிப்பு அளித்து அவர்கள் நீதிமான்கள் என்று அறிக்கையிடுதலே நீதிமானாக்குதல். (2 கொரிந்தியர் 5:21)*

**கேள்வி** *60:* *மகவேற்பு என்றால் என்ன?*

**பதில்:** *கடவுள், பாவிகளைத் தன்னுடைய அன்புக்குரிய குழந்தைகளாகக் கருதி தன்னுடைய குடும்பத்துக்குள் சேர்த்துக்கொள்வதே மகவேற்பு. (1 யோவான் 3:1)*

**கேள்வி** *61:* *பரிசுத்தமாக்குதல் என்றால் என்ன?*

**பதில்:** *கடவுள், பாவிகளின் இருதயத்தையும், நடத்தையையும் தூய்மையாக்கும் செயலே பரிசுத்தமாக்குதல். (1 தெசலோனிக்கேயர் 5:23)*

**கேள்வி** *62:* *மரணத்தின்போது நீதிமான்களுக்கு என்ன நடக்கின்றது?*

**பதில்:** *அவர்களுடைய உடல்கள் மண்ணையும், ஆவிகள் ஆண்டவரிடமும் சேர்கின்றன. (2 கொரிந்தியர் 5:8)*

**கேள்வி** *63:* *மரணத்தின்போது கேடானவர்களுக்கு என்ன நடக்கின்றது?*

**பதில்:** *நியாயத்தீர்ப்பு நாள் வரையும் அவர்கள் கடவுளால் வைக்கப்பட்டிருந்து தண்டனையை அனுபவிக்கிறார்கள். (லூக்கா 16:22-23)*

**கேள்வி** *64:* *மரித்தவர்கள் மறுபடியும் உயிரோடு எழுப்பப்படுவார்களா?*

**பதில்:** *ஆம், கிறிஸ்து மறுபடியும் வரும்போது மரித்தவர்கள் அனைவரும் உயிரோடு எழுப்பப்படுவார்கள். (1 தெசலோனிக்கேயர் 4:16)*

**கேள்வி** *65:* *நியாயத்தீர்ப்பு நாளில் கேடானவர்களுக்கு என்ன நடக்கும்?*

**பதில்:** *அவர்கள் அக்கினிக்கடலிலே தள்ளப்படுவார்கள். (வெளிப்படுத்தல் 20:15)*

**கேள்வி** *66:* *அக்கினிக்கடல் என்றால் என்ன?*

**பதில்:** *நடுக்கம் தருகிறதும், நித்திய தண்டனையைத் தருகிறதுமான இடம். (மாற்கு 9:48)*

**கேள்வி** *67:* *நியாயத்தீர்ப்பு நாளில் நீதிமான்களுக்கு என்ன நடக்கப்போகின்றது?*

**பதில்:** *அவர்கள் புதிய வானத்திலும், புதிய உலகத்திலும் பிதாவின் இராஜ்யத்தை அடைவார்கள். (மத்தேயு 25:34)*

**கேள்வி** *68:* *புதிய வானம், புதிய உலகம் என்பவை என்ன?*

**பதில்:** *கடவுள் தன்னுடைய மக்களோடு நித்தியத்திற்கும் வாழும் இடம். (வெளிப்படுத்தல் 21:3)*

**கேள்வி** *69:* *கடவுள் மனிதனிடம் எதிர்பார்க்கும் கடமை என்ன?*

**பதில்:** வெளிப்படுத்தப்பட்டுள்ள அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிவது. *(மீகா 6:8)*

**கேள்வி** *70:* *வெளிப்படுத்தப்பட்டுள்ள கடவுளின் சித்தம் என்ன?*

**பதில்:** பரிசுத்தமும், நீதியும், நன்மையானதுமான நியாயப்பிரமாணமே அவருடைய வெளிப்படுத்தப்பட்டுள்ள சித்தம். *(ரோமர் 7:12)*

**கேள்வி** *71:* *நியாயப்பிரமாணம் எங்கே சுருக்கமாக தரப்பட்டிருக்கிறது?*

**பதில்:** பத்துக் கட்டளைகளில். *(உபாகமம் 4:13)*

**கேள்வி** *72:* *முதல் நான்கு கட்டளைகளும் எதைப் போதிக்கின்றன?*

**பதில்:** தேவனுக்கு நமது கடமையை. *(உபாகமம் 6:5, 6)*

**கேள்வி** *73:* *கடைசி ஆறு கட்டளைகள் எதைப் போதிக்கின்றன?*

**பதில்:** மனிதர்களுக்கு நமது கடமையை. *(உபாகமம் 10:19)*

**கேள்வி** *74:* *பத்துக்கட்டளைகளின் சாராம்சம் என்ன?*

**பதில்:** கடவுளை என் முழு இருதயத்தோடு நேசித்தலும், அயலானை என்னைப்போல நேசித்தலும். *(மத்தேயு 22:37-40)*

**கேள்வி** *75:* *உன்னுடைய அயலான் யார்?*

**பதில்:** என்னுடைய சக மனிதர்கள் எல்லோரும் எனது அயலவர்கள். *(மத்தேயு 22:37-40)*

**கேள்வி** *76:* *முதலாவது கட்டளை என்ன?*

**பதில்:** *முதலாவது கட்டளை, என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம் என்பதே. (யாத்திராகமம் 20:3)*

**கேள்வி** *77:* *முதலாவது கட்டளை நமக்கு எதைப் போதிக்கிறது?*

**பதில்:** *கடவுளை மட்டுமே தொழுதுகொள்ள வேண்டும் என்று போதிக்கிறது.*
*(மத்தேயு 4:10)*

**கேள்வி** *78:* *இரண்டாம் கட்டளை என்ன?*

**பதில்:** *மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும், உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும், நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தை பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறேன். என்னிடத்தில் அன்புகூர்ந்து என் கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கம் செய்கிறவராய் இருக்கிறேன்.*
*(யாத்திராகமம் 20:4)*

**கேள்வி** *79:* *இரண்டாவது கட்டளை நமக்கு எதைப் போதிக்கிறது?*

**பதில்:** *கடவுளை சரியான முறையில் ஆராதிக்கும்படியும், விக்கிரக ஆராதனையைப் புறக்கணிக்கும்படியும் போதிக்கிறது.*
*(உபாகமம் 12:32)*

**கேள்வி 80:** *மூன்றாவது கட்டளை என்ன?*

**பதில்:** *உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார் என்பது மூன்றாம் கட்டளை. (யாத்திராகமம் 20:7)*

**கேள்வி 81:** *மூன்றாம் கட்டளை நமக்கு எதைப் போதிக்கிறது?*

**பதில்:** *தேவனுடைய நாமத்தையும், வார்த்தையையும், கிரியைகளையும் மதிக்கும்படிப் போதிக்கிறது. (வெளிப்படுத்தல் 15:3-4)*

**கேள்வி 82:** *நான்காவது கட்டளை என்ன?*

**பதில்:** *நான்காவது கட்டளை, ஓய்வு நாளைப் பரிசுத்தமாக ஆசரிக்க நினைப்பாயாக; ஆறு நாளும் நீ வேலை செய்து உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வு நாள்; அதிலே நீயாகிலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருக ஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். கர்த்தர் ஆறு நாளைக்குள்ளே வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆதலால் கர்த்தர் ஓய்வு நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார். (யாத்திராகமம் 20:8-10)*

**கேள்வி 83:** *நான்காம் கட்டளை நமக்கு எதைப் போதிக்கிறது?*

**பதில்:** *ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்கும்படிப் போதிக்கிறது. (உபாகமம் 5:12)*

**கேள்வி 84:** *வாரத்தின் எந்நாள் கிறிஸ்தவர்களுக்கு ஓய்வு நாள்?*

**பதில்:** *கர்த்தருடைய நாள் என்று அழைக்கப்படும் வாரத்தின் முதல் நாள். (அப்போஸ்தலர் 20:7)*

**கேள்வி 85:** *அது ஏன் கர்த்தருடைய நாள் என்று அழைக்கப்படுகிறது?*

**பதில்:** *அந்நாளிலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததால் அவ்வாறு அழைக்கப்படுகிறது. (யோவான் 20:1)*

**கேள்வி 86:** *ஓய்வு நாள் எவ்வாறு ஆசரிக்கப்பட வேண்டும்?*

**பதில்:** *ஜெபத்திலும், துதியிலும், தேவனுடைய வசனத்தைக் கேட்பதிலும், வாசிப்பதிலும், நமது அயலவருக்கு நன்மை செய்வதிலும் செலவிடப்பட வேண்டும்.*
*(லேவியராகமம் 23:3; மத்தேயு 12:12)*

**கேள்வி 87:** *ஐந்தாவது கட்டளை என்ன?*

**பதில்:** *ஐந்தாவது கட்டளை, உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதாகும். (யாத்திராகமம் 20:12)*

**கேள்வி 88:** *ஐந்தாவது கட்டளை நமக்கு எதைப் போதிக்கின்றது?*

**பதில்:** *நமது பெற்றோரை நேசிக்கவும் அவர்களுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்றும் போதிக்கின்றது. (எபேசியர் 6:1)*

**கேள்வி 89:** *ஆறாவது கட்டளை என்ன?*

**பதில்:** *ஆறாவது கட்டளை, கொலை செய்யாதிருப்பாயாக. (யாத்திராகமம் 20:13)*

**கேள்வி** *90:* *ஆறாவது கட்டளை நமக்கு எதைப் போதிக்கின்றது?*

**பதில்:** *நமது இருதயத்தாலும், பேச்சாலும், நடத்தையாலும் அன்பு செலுத்த வேண்டும் என்று போதிக்கின்றது. (சங்கீதம் 82:3, 4)*

**கேள்வி** *91:* *ஏழாவது கட்டளை என்ன?*

**பதில்:** *ஏழாவது கட்டளை, விபச்சாரம் செய்யாதிருப்பாயாக. (யாத்திராகமம் 20:14)*

**கேள்வி** *92:* *ஏழாவது கட்டளை நமக்கு எதைப் போதிக்கின்றது?*

**பதில்:** *நமது இருதயத்திலும், பேச்சிலும், நடத்தையிலும் தூய்மையாய் இருக்கும்படிப் போதிக்கிறது. (எபேசியர் 5:3-4)*

**கேள்வி** *93:* *எட்டாவது கட்டளை என்ன?*

**பதில்:** *எட்டாவது கட்டளை, களவு செய்யாதிருப்பாயாக. (யாத்திராகமம் 20:15)*

**கேள்வி** *94:* *எட்டாவது கட்டளை நமக்கு எதைப் போதிக்கின்றது?*

**பதில்:** *நேர்மையாக இருக்க வேண்டும் என்றும், கடுமையாக உழைக்க வேண்டும் என்றும் போதிக்கின்றது. (எபேசியர் 4:28)*

**கேள்வி** *95:* *ஒன்பதாவது கட்டளை என்ன?*

**பதில்:** *ஒன்பதாவது கட்டளை, பிறருக்கு விரோதமாக பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக. (யாத்திராகமம் 20:16)*

**கேள்வி** *96:* *ஒன்பதாவது கட்டளை நமக்கு எதைப் போதிக்கின்றது?*

**பதில்:** *உண்மை சொல்லும்படிப் போதிக்கின்றது. (நீதிமொழிகள் 12:22)*

**கேள்வி** *97:* *பத்தாவது கட்டளை என்ன?*

**பதில்:** *பத்தாவது கட்டளை, பிறருடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறருக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக. (யாத்திராகமம் 20:17)*

**கேள்வி** *98:* *பத்தாவது கட்டளை நமக்கு எதைப் போதிக்கின்றது?*

**பதில்:** *நமக்கிருப்பதில் திருப்தியாக இருக்கும்படிப் போதிக்கின்றது. (எபிரெயர் 13:5)*

**கேள்வி** *99:* *எந்த மனிதனாலும் இந்த பத்துக் கட்டளைகளைப் பூரணமாக கடைப்பிடிக்க முடியுமா?*

**பதில்:** *ஆதாமுடைய வீழ்ச்சியிலிருந்து எந்த மனிதனும் ஒருபோதும் பத்துக் கட்டளைகளைப் பூரணமாகக் கடைப்பிடித்ததில்லை; கடைப்பிடிக்கவும் முடியாது. (பிரசங்கி 7:20)*

**கேள்வி** *100:* *பத்துக் கட்டளைகள் நமக்கு எவ்வாறு பயன்படுகின்றன?*

**பதில்:** *அவை நமது கடமைகளை நமக்குப் போதிப்பதோடு, நமக்கு ஒரு இரட்சகர் தேவை என்றும் காட்டுகின்றன. (ரோமர் 3:20)*

**கேள்வி 101:** *ஒவ்வொரு பாவமும் எதை அடையத் தகுதியானது?*

**பதில்:** *கடவுளுடைய கோபத்தையும், சாபத்தையும். (கலாத்தியர் 3:10)*

**கேள்வி 102:** *கடவுளுடைய கோபத்திலிருந்து யாரால் தப்ப முடியும்?*

**பதில்:** *பாவத்திலிருந்து மனந்திருந்தி, கிறிஸ்துவை விசுவாசித்து, பரிசுத்தமான வாழ்க்கையை வாழ்கிறவர்கள் மட்டுமே கடவுளுடைய கோபத்திலிருந்து தப்ப முடியும். (மாற்கு 1:15)*

**கேள்வி 103:** *மனந்திரும்புதல் என்றால் என்ன?*

**பதில்:** *பாவத்திற்காக வருந்தி, கடவுளுக்கு அதிருப்தி தரும் அப்பாவத்தை வெறுத்து ஒதுக்குதல். (யோவேல் 2:13)*

**கேள்வி 104:** *விசுவாசிப்பது அல்லது கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பது என்றால் என்ன?*

**பதில்:** *இரட்சிப்பிற்காக கிறிஸ்துவில் மட்டுமே நம்பிக்கை வைப்பது. (யோவான் 1:12)*

**கேள்வி 105:** *எத்தனை திருநியமங்கள் உள்ளன?*

**பதில்:** *இரண்டு. (மத்தேயு 28:18-20; 1 கொரிந்தியர் 11:23-26)*

**கேள்வி 106:** *அவை யாவை?*

**பதில்:** *ஞானஸ்நானமும், திருவிருந்தும். (மத்தேயு 28:18-20; 1 கொரிந்தியர் 11:23-26)*

**கேள்வி 107:** *இத்திருநியமங்களை நியமித்தவர் யார்?*

**பதில்:** *ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. (மத்தேயு 28:18-19; 1 கொரிந்தியர் 11:23-26)*

**கேள்வி 108:** *இத்திருநியமங்களை கிறிஸ்து ஏன் நியமித்தார்?*

**பதில்:** *அவருடைய சீடர்களை உலகத்திலிருந்து பிரித்துக்காட்டவும், அவர்களுக்கு ஆறுதல் தந்து, பெலப்படுத்தவும். (மத்தேயு 28:18-19; 1 கொரிந்தியர் 11:23-26)*

**கேள்வி 109:** *ஞானஸ்நானம் கொடுக்க வேண்டிய முறை என்ன?*

**பதில்:** *தண்ணீரில் முழு உடலையும் முழுக்க வேண்டும். (யோவான் 3:23)*

**கேள்வி 110:** *ஞானஸ்நானம் எதைக் குறிக்கின்றது?*

**பதில்:** *இயேசு கிறிஸ்துவோடு இருக்கும் ஐக்கியத்தை. (ரோமர் 6:3)*

**கேள்வி 111:** *யாருடைய பெயரில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டும்?*

**பதில்:** *பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவருடைய பெயரில். (மத்தேயு 28:19)*

**கேள்வி 112:** *யாருக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டும்?*

**பதில்:** *விசுவாசிகளுக்கு மட்டும். (அப்போஸ்தலர் 2:41)*

**கேள்வி 113:** *ஞானஸ்நானம் உன்னை எதற்குக் கட்டுப்படுத்துகிறது?*

**பதில்:** *கிறிஸ்துவை உண்மையாக பின்பற்ற. (ரோமர் 6:4)*

**கேள்வி 114:** *திருவிருந்து என்றால் என்ன?*

**பதில்:** *கிறிஸ்துவின் பாடுகளையும், மரணத்தையும் நினைவுகூரும்படி அப்பத்தைப் புசித்து, இரசத்தைக் குடித்தல். (லூக்கா 22:19, 20)*

**கேள்வி 115:** *அப்பம் எதைக் குறிக்கின்றது?*

**பதில்:** *நமது பாவங்களுக்காக நொருக்கப்பட்ட கிறிஸ்துவின் சரீரத்தைக் குறிக்கின்றது. (லூக்கா 22:19, 20)*

**கேள்வி 116:** *இரசம் எதைக் குறிக்கின்றது?*

**பதில்:** *நமது இரட்சிப்பிற்காக சிந்தப்பட்ட கிறிஸ்துவின் இரத்தத்தைக் குறிக்கின்றது. (லூக்கா 22:19, 20)*

**கேள்வி 117:** *திருவிருந்தில் யார் பங்கேற்க வேண்டும்?*

**பதில்:** *தங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்பி, இரட்சிப்புக்காக இயேசு கிறிஸ்துவிலே விசுவாசம் வைத்து, தங்கள் சக மனிதர்களை நேசிப்பவர்கள் மட்டும். (1 கொரிந்தியர் 11:28, 29)*

**கேள்வி 118:** *ஜெபம் என்றால் என்ன?*

**பதில்:** *கடவுள், தருவேன் என்று வாக்குறுதி தந்துள்ளவற்றை அவரிடம் கேட்பதே ஜெபம். (பிலிப்பியர் 4:6)*

**கேள்வி 119:** *யாருடைய பெயரில் நாம் ஜெபம் செய்ய வேண்டும்?*

**பதில்:** *கிறிஸ்துவின் பெயரில் மட்டும். (யோவான் 16:23, 24)*

**கேள்வி 120:** *எப்படி ஜெபிக்க வேண்டும் என்று போதிக்க கிறிஸ்து நமக்கு எதைத் தந்துள்ளார்?*

**பதில்:** *கர்த்தருடைய ஜெபம். (மத்தேயு 6:9-13)*

**கேள்வி 121:** *கர்த்தருடைய ஜெபத்தை சொல்ல முடியுமா?*

**பதில்:** *பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடைய இராஜ்யம் வருவதாக; உம்முடைய*

*சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுவதுபோல பூமியிலும் செய்யப்படுவதாக, எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களை சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென். (மத்தேயு 6:9-13)*

**கேள்வி *122:*** *கர்த்தருடைய ஜெபத்திலே எத்தனை விண்ணப்பங்கள் உண்டு?*

**பதில்:** *ஆறு. (மத்தேயு 6:9-13)*

**கேள்வி *123:*** *முதலாவது விண்ணப்பம் என்ன?*

**பதில்:** *உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. (மத்தேயு 6:9)*

**கேள்வி *124:*** *முதலாவது விண்ணப்பத்தின் மூலம் நாம் எதற்காக ஜெபிக்கிறோம்?*

**பதில்:** *கடவுளுடைய நாமம் நம்மூலமாகவும் எல்லா மனிதர்கள் மூலமாகவும் மகிமைப்பட வேண்டும் என்று. (சங்கீதம் 67:3)*

**கேள்வி *125:*** *இரண்டாவது விண்ணப்பம் என்ன?*

**பதில்:** *உம்முடைய இராஜ்யம் வருவதாக. (மத்தேயு 6:10)*

**கேள்வி *126:*** *இரண்டாவது விண்ணப்பத்தின் மூலம் நாம் எதற்காக ஜெபிக்கிறோம்?*

**பதில்:** *உலகம் முழுவதும் சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும் என்றும், நம்மாலும் எல்லா*

*மனிதராலும் அது விசுவாசிக்கப்பட்டு கீழ்ப்படியப்பட வேண்டும் என்றும் ஜெபிக்கிறோம். (2 தெசலோனிக்கேயர் 3:1)*

**கேள்வி** *127:* *மூன்றாவது விண்ணப்பம் என்ன?*

**பதில்:** *உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக.*
*(மத்தேயு 6:10)*

**கேள்வி** *128:* *மூன்றாவது விண்ணப்பத்தின் மூலம் நாம் எதற்காக ஜெபிக்கிறோம்?*

**பதில்:** *பரலோகத்திலே தேவதூதர்கள் தேவனை சேவிப்பதுபோல பூலோகத்திலுள்ள மனிதர்களும் செய்ய வேண்டுமென்று.*
*(சங்கீதம் 103:20, 22)*

**கேள்வி** *129:* *நான்காவது விண்ணப்பம் என்ன?*

**பதில்:** *அன்றன்றுள்ள ஆகாரத்தை எங்களுக்கு இன்று தாரும்.*
*(மத்தேயு 6:11)*

**கேள்வி** *130:* *நான்காவது விண்ணப்பத்தின் மூலம் நாம் எதற்காக ஜெபிக்கிறோம்?*

**பதில்:** *நமது சரீரத்திற்கும், ஆவிக்கும் தேவையான எல்லாவற்றையும் கடவுள் தர வேண்டுமென்று.*
*(நீதிமொழிகள் 30:8)*

**கேள்வி** *131:* *ஐந்தாவது விண்ணப்பம் என்ன?*

**பதில்:** *எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிப்பது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.*
*(மத்தேயு 6:12)*

**கேள்வி** *132:* *ஐந்தாவது விண்ணப்பத்தின் மூலம் நாம் எதற்காக ஜெபிக்கிறோம்?*

**பதில்:** *கடவுள் நம்முடைய பாவங்களை மன்னிக்க வேண்டும் என்றும் நமக்கு விரோதமாக பாவம் செய்பவர்களை நாம் மன்னிக்க துணைபுரிய வேண்டும் என்றும் ஜெபிக்கிறோம்.*
*(1 யோவான் 1:9; மத்தேயு 6:14)*

**கேள்வி** *133:* *ஆறாவது விண்ணப்பம் என்ன?*

**பதில்:** *எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்.*
*(மத்தேயு 6:13)*

**கேள்வி** *134:* *ஆறாவது விண்ணப்பத்தின் மூலம் நாம் எதற்காக ஜெபிக்கிறோம்?*

**பதில்:** *கடவுள் நம்மை பாவத்திலிருந்து காக்க வேண்டுமென்று ஜெபிக்கிறோம்.*
*(சங்கீதம் 19:13)*

# இதை எவ்வாறு பயன்படுத்துவது?

பெற்றோர்கள் இதைத் தங்களுடைய குடும்ப ஆராதனை நேரத்தில் பிள்ளைகளுக்கு கேள்வி பதில்களைத் தந்து விளக்கி அவற்றை மனனம் செய்யும்படிச் செய்யலாம். இதன் மூலம் சிறுவர்கள் வேத அறிவில் வளர முடியும். பெற்றோர்கள் கேள்வி-பதில்களை ஏற்கனவே படித்து அவற்றின் மூலம் என்ன சொல்லப் போகிறோம் என்று தம்மைத் தயார் செய்துக்கொள்ள வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு கேள்வி-பதில் என்ற விதத்தில் இதைப் பயன்படுத்தலாம். குடும்ப ஆராதனை நேரத்தில் வேதத்தை வாசித்து, ஜெபம் செய்யும்போது இதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். பின்வரும் உதாரணத்தைப் பெற்றோர்கள் பின்பற்றலாம்.

1. ஜெபம்.
2. சங்கீதம் அல்லது கீர்த்தனைப் பாடல்.
3. வேதத்தை வாசித்து அதற்கு சுருக்கமாக விளக்கமளித்தல்.
4. சிறுவர்களுக்கான உபதேசத்திலிருந்து ஒரு கேள்வி பதிலுக்கான விளக்கமும். சிறுவர்கள் அதை மனனம் செய்தலும். (அடுத்த நாள் குடும்ப ஜெபத்தில் அடுத்த கேள்வி-பதிலைப் படிக்க ஆரம்பிப்பதற்கு முன் பிள்ளைகள் இதை மறுபடியும் சொல்ல வேண்டும்).
5. சங்கீதம் அல்லது கீர்த்தனைப் பாடல்.
6. ஜெபம்.

இவை எல்லாவற்றையும் 30 அல்லது 40 நிமிடங்களில் செய்யும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும். சிறுவர்களையும்

*ஜெபத்தில் கலந்துகொள்ளும்படி செய்து அவர்களுக்கு ஆர்வம் ஏற்படும் வகையில் குடும்ப ஜெபம் இருக்க வேண்டும்.*

*"பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்" (நீதிமொழிகள் 22:6) என்ற வேத வாக்கியங்களை விசுவாசித்து, பரிசுத்த ஆவியானவரின் துணையுடன் கிறிஸ்தவ பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு வேத அறிவூட்ட இச்சிறுவர்களுக்கான வேத உபதேசத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.*

*திருச்சபைப் போதகர்கள் தங்களுடைய சபை மக்கள் இதைப் பயன்படுத்திக்கொள்ள ஆர்வமூட்ட வேண்டும். அதற்கான சகல உதவிகளையும் அவர்களுக்கு செய்துகொடுக்க வேண்டும். போதகர்கள் தங்களுடைய குடும்பத்தில் இதைப் பயன்படுத்தி சபை மக்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். சபை மக்களை வீடுகளில் போய்ப்பார்த்து அவர்களுடன் ஜெபிக்கும்போது இச்சிறுவர்களுக்கான உபதேசத்தை அவர்கள் முறையாகப் பயன்படுத்துகிறவர்களா என்று பார்த்து அதைச் செய்யும்படி ஊக்குவிக்க வேண்டும். சபை மக்கள் தாங்களும் இதைப்படித்து தங்களுடைய பிள்ளைகளை வேத அறிவில் வளர்க்கும்போது சபை கர்த்தருடைய பாதையில் தடங்கலில்லாமல் நடக்க முடிகின்றது. மேலும் ஞாயிறு பாடசாலையில் இதை முக்கியமாகப் பயன்படுத்த வேண்டும். ஞாயிறு பாட சாலை ஆசிரியர்கள் இதில் தேர்ச்சி பெற்றிருக்கும்படியாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். வேதபூர்வமாக பிரசங்கித்து, போதித்து சபை நடத்தும் போதகர்களுக்கு இச்சிறுவர்களுக்கான உபதேசத்தைப் படித்து வளரும் குடும்பங்கள் பேராசீர்வாதமாக அமைவார்கள்.*